

சென்னை – ஆழ்வார்பேட்டையில் உள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில், நேற்று முன்தினம் (21.10.2026), கழக முன்னோடி நினைவில் வாழும் செங்குன்றம் டி.நாகலிங்கம் அவர்களின் பெயர்த்தியும், செங்குன்றம் பேரூர்க் கழகப் பொருளாளர் லயன் என்.சந்திரசேகர் – திருமதி லயன் சி.ராஜேஸ்வரி ஆகியோரின் புதல்வியுமான செல்வி சி.மணிமேகலை, கே.ராஜேஸ்குமார் ஆகியோரது மணவிழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆகியோர் உள்ளனர்.



திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களை அவரது இல்லத்தில், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார்.

கார்த்திகா கைதுக்கு கண்டனம் தெரிவித்த

தி.மு. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிக்கை!

சென்னை, அக்.23- தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட கார்த்திகாவை த.வெ.க. அரசு கைது செய்ததற்கு கண்டனம் தெரிவித்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 'அன்பும் நன்றியும்' எனக் குறிப்பிட்டு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு பொய் வழக்குப் புனைந்து, தாராபுரம் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட்ட அன்புத்தங்கை கார்த்திகா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட நாம் தமிழர் உறவுகளைக் கைது செய்துள்ள தவெக அரசின் எதேச்சதிகாரப்போக்கைக் கண்டித்து ஆதரவுக்குரல் எழுப்பிய, தி.மு.க.வின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி அவர்களுக்கும் என்னுடைய அன்பும் நன்றியும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு

மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, அக். 23- திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றுகிறார். தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதுகுறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் நாளை (24.10.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழுக்கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன். எம்.பி., அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளைக் கழக மறுசீரமைப்பு பணிகள் குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதிக்கப் படவுள்ளது.

மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கருத்துக்கள் வழங்கி உரையாற்றுகின்றனர்.

செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர.பேரூர் கழக செயலாளர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்களுடன் கழக மறு சீரமைப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் சீர்காழி ஒன்றிய கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டத்திற்கான தலைமைக் கழக பிரதிநிதி மாநில பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன் பேசினார் உடன் மயிலாடுதுறை மாவட்டத்திற்கான தலைமைக் கழக பிரதிநிதியும், முன்னாள் அமைச்சருமான கோவி. செழியன் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் இரா.செந்தில் செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், ஒன்றிய கழக செயலாளர் செல்ல சேது. ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர் மற்றும் பலர் உள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், தே.மு.தி.க. பொருளாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எல்.கே.சுதீஷ் தனது மகளின் திருமண விழா அழைப்பிதழை நேற்று முன்தினம் வழங்கினார்.

வாழ்க நெடுங்காலம்!



ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு
உடல்நலமில்லை;
பார்த்துவந்தேன் என்று
பதிவிட்டிருந்தார்
முன்னாள் முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்கள்

அவரையே அழைத்து
ஆசிரியர் நலம்குறித்து விசாரித்தேன்

'அச்சப்படும்படி ஏதுமில்லை'
ஆறுதல் சொன்னார் தளபதி

ஆனால்,
அன்புகொண்ட மனம்
அடங்கவில்லை

நேற்று முற்பகல்
ஆசிரியர் இல்லம்சென்று
அவரைச் சந்தித்தேன்

என்ன ஆச்சரியம்!

படுக்கையில் இருப்பார்
என்று பார்த்தால்
படைவீரன்போல்
நடந்துவந்தார்

எதையும் மறவாத
ChatGPT மூளை
அவருடையது

முத்துமணிச் சொற்களின்
தத்துவச் சொல்லாடல்
அவருடையது

வயிற்றில் தொப்பையும்
முதுகில் கூனும் இல்லாதவர்க்கு
வாழ்நாள் அதிகம்

நூறாண்டு வாழ்க
என்று சொன்னால்
அவருக்குக் கோபம்வரும்

'வாழ்த்துவதில்
என்ன சிக்கனம்' என்பார்

"உங்கள்
உடலுக்கு வயது 94;
மனதுக்கு வயது 34.
வாழ்க நெடுங்காலம்" என்று
வாழ்த்தி விடைகொண்டேன்

கவிப்பேரரசு
வைரமுத்து

வடகிழக்கு பருவமழை: ஒரே நாளில்

துறைமுகம் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு!

சென்னை, அக்.23- ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களின் நலனே தி.மு.க.வின் முதன்மையான நோக்கம் என்ற கொள்கையுடன் செயல்படும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து, துறைமுகம் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (21.10.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

முதற்கட்டமாக, 60-வது வார்டு இரண்டாவது கடற்கரைச் சாலை, 56-வது வார்டு ஆசீர்வாதபுரம், வள்ளுவர் நகர், 54-வது வார்டு கூவம் ஆற்றங்கரை, 57-வது வார்டு கல்யாணபுரம் பள்ளப் பகுதி, கூவம் ஆற்றங்கரை மற்றும் அண்ணா தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றம், கழிவுநீர் அகற்றம், ஆற்றங்கரை தூர்வாருதல் மற்றும் சாலை சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்தார். தொடர்ந்து, பி.ஆர்.என். பகுதியில் நடைபெற்று வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மாலை 4.45 மணி முதல் மேலும் 5 இடங்களில் ஆய்வு மேற்கொண்டார்.

59-வது வார்டு எல்லீஸ்புரத்தில் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள், சத்தியவாணி முத்துநகர், 60-வது வார்டு அன்னை சத்யா நகர், 56-வது வார்டு அப்பாராவ் தோட்டம் மற்றும் 55-வது வார்டு செயின்ட் சேவியர் தெரு ஆகிய பகுதிகளில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.



ஆய்வின்போது, வடகிழக்குப் பருவமழையால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தவும், குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தவும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் மாநகராட்சி, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், மின்சார வாரியம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாமன்ற உறுப்பினர்கள் வெ. பரிமளம் எம்.சி., எல். தாஹா நவீன் எம்.சி., நா. ரஞ்சித் விஜயாலயன், எல். சம்பத்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன், ராஜா (எ) கதிரவன், எம். பரத்குமார், இரா. ரவிச்சந்திரன், மா. ஜெய்சங்கர், ஜி. ராம்மூர்த்தி, பா. அண்ணாதுரை, டி. சதீஷ்குமார், சேப்பாக்கம் பிரபாகரன், எல். சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், லண்டன் க. முருகன் மற்றும் கழக நிர்வாகிகள், செய்வீரர்கள், முன்னோடிகள், மாநகராட்சி, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், மின்சார வாரியம் உள்ளிட்ட துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.